மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமனையில் செயல்பட்டு வரும் சித்த மருத்துவப் பிரிவிற்கு தனியாகக் கட்டடம் கட்டித் தரும் கருத்துரு அரசின் ஆய்வில் இல்லையென்று சொன்னாலும், சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி சித்த மருந்தகங்களுக்குத் தேவையான கட்டடங்களைக் கட்டித் தர தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கணிசமான அளவு நிதி ஒதுக்கக் கேட்டு எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் 28-11-2001 அன்று நான் எழுதிய கடிதம் துறை வழியாக அனைவருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று ஏறக்குறைய ரூபாய் 104 இலட்சத்தை 37 சட்டமன்ற உறுப்பினர்கள், 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கித் தந்துள்ளார்கள். அந்த உதவியுடன் அந்தந்தத் தொகுதிகளில் சித்த மருந்தகங்களுக்குக் கட்டடம் கட்டும் பணி இப்போது நடைபெற்று வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கணிசமான அளவு நிதி ஒதுக்கினால் குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமனையிலுள்ள சித்த மருந்தகத்திற்குத் தனியாகக் கட்டடம் இந்த ஆண்டேகூட கிடைத்துவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 88, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

88—

பாசுமதி அரிசி

•11455—திரு. கா. கந்தசாமி:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2003 மார்ச் 26]

(அ) தமிழ்நாட்டில் பாசுமதி அரிசி உற்பத்தி செய்யப்படுகிறதா?

(ஆ) பாசுமதி அரிசியை ஏற்றுமதி செய்ய மாநில அரசு ஊக்கம் அளிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் பாசுமதி அரிசி உற்பத்தி செய்யப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் பாசுமதி அரிசி உற்பத்தி செய்ய ஏற்கெனவே ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த ஆராய்ச்சிகளின் முடிவுகள் என்ன என்று தெரியவில்லை. தமிழ்நாட்டிற்குத் தேவையான பாசுமதி அரிசி வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வரப்படுகின்றது. பாசுமதி அரிசிக்கு நல்ல விலை கிடைக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகள் நல்ல விலை பெற்றிட, தமிழ்நாட்டில் பாசுமதி அரிசி உற்பத்தி செய்ய அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசுமதி நெல் கதிர் வந்ததிலேயிருந்து அறுவடை முடியும் வரை 22 முதல் 30 டிகிரி செல்ஷியஸ் வெப்பநிலையிலே இருக்க வேண்டும். அந்தத் தட்பவெப்பநிலை தமிழ்நாட்டில் இல்லாததால் உற்பத்தி செய்ய இயலாத நிலை இருக்கிறது. எனவே தமிழ்நாட்டில் பாசுமதி அரிசி எங்கும் பயிரிடப்படவில்லை எனத் தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 89, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

89—

பெண்களின் திருமண வயது

•6946—திரு. வெ. ஏழுமலை:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—